பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 08 2026 SATURDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் 2 லட்சத்து 11 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை, சிலிண்டருக்கு 192 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

4. ஈரான் மீது தாக்குதல் நடத்தினால், உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று அந்நாட்டு அரசு எச்சரித்துள்ளது.

5. பதினேழு வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>>><<<<<<<

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதன் அடிப்படையிலேயே விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டம் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டம் விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தி வருவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு உத்வேகம் அளித்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 84 ஆயிரத்து 84 கோடி ரூபாய் மதிப்பிலான Samudra Manthan திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்ட இது உதவிம் என்றும் திரு. அமித் ஷா அதில் குறிப்பிட்டுள்ளார்.*

>>>>>>><<<<<<<

*இளையோர் மேம்பாட்டில் மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மாற்றியமைக்கப்பட்ட கேலோ இந்தியா மற்றும் தேசிய விளையாட்டு அமைப்புகளுக்கு நிதி வழங்கும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*36 ஆயிரத்து 441 கோடி ரூபாய் செலவில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இளையோரின் விளையாட்டு திறனை கண்டறிந்து, அவர்களுக்கு சர்வதேச தரத்திலான பயிற்சி இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.*

>>>>>>><<<<<<<

*டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கடந்த மாதம் 29 லட்சத்து 88 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இது, கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 22 சதவீதம் அதிகமாகும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

>>>>>>><<<<<<<

*சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மாதம் 2 லட்சத்து 11 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியதாக மத்திய அரசு கூறியுள்ளது.*

*இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 15 புள்ளி நான்கு சதவீதம் அதிகமாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>>><<<<<<<*

*வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை, சிலிண்டருக்கு 192 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.*

*இதன்படி, தில்லியில் இந்த சிலிண்டரின் விலை 2 ஆயிரத்து 738 ரூபாயாக குறைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*விமான எரிபொருள் விலை லிட்டருக்கு 5 ரூபாய் அதிகரித்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*சுதந்திரப் போராட்ட வீரர் லோக்மான்ய பாலகங்காதர திலகரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.*

*இதனையொட்டி, தலைவர்கள் பலர் அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.*

*>>>>>>><<<<<<<*

*தில்லியில் மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை வழங்கும் திட்டம் இன்று முதல் செயல்பாட்டுக்கு வருகிறது.*

*இந்த திட்டத்தின் மூலம் 17 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என்று தில்லி அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*தமிழை, சாதாரண மக்களும் எளிதாக புரிந்து கொண்டு பாட திருமுறைகள் உதவியுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.*

*சென்னையில் நடைபெற்று வரும் சேக்கிழார் திருவிழாவில் இன்று புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் - நிர்மலா 45 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*தமிழகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பிறகான களப்பணிகள் இன்று தொடங்கின.*

*முதல்கட்டமாக வீடு பட்டியல் மற்றும் வீட்டு வசதிகள் குறித்த கணக்கெடுப்புகள் இதில் மேற்கொள்ளப்படவுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*முதல்முறையாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்த பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

*இப்பணிகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடவுள்ளதாவும் அதில் கூறப்பட்டுள்ளது.*

*சுயமாக விவரங்களை பதிவு செய்யும் வசதியை பயன்படுத்தி, 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் தங்களது விவரங்களை பதிவு செய்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*மேகதாது பிரச்சினையில் உச்சநீதிமன்றத்தை நாடுவதே, தமிழகத்திற்கான ஒரே வழி என்று மாநில அமைச்சர் திரு. நிர்மல்குமார் கூறியுள்ளார்.*

*இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*(சவுண்ட் பைட் - நிர்மல்குமார் 36 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*கேரளாவில் கனமழையால் ஏற்படும் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அம்மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. ஏ.பி. அனில்குமார் கூறியுள்ளார்.*

*மலப்புரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அதிக பாதிப்புக்குள்ளாகும் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.*

*மாநிலத்தில் மழை நீடித்து வந்த போதிலும், நிலைமை கட்டுக்குள் உள்ளதாகவும் திரு. அனில்குமார் கூறினார்.*

*>>>>>>><<<<<<<*

*பெங்களூரு நகரை தூய்மையாக பராமரிக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று கர்நாடக முதலமைச்சர் திரு. D.K. சிவகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*பெங்களூரு தூய்மை இயக்கத்தில் இன்று பங்கேற்றுப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*கட்டுமானக் கழிவுகளை முறையாக அகற்றாத வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் முதலமைச்சர் எச்சரித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*சத்திஷ்கட் முதலமைச்சர் திரு. Vishnu Deo Sai, பிஜேபி தலைவர் திரு. நிதின் நபீனை புதுதில்லியில் சந்தித்து பேசினார்.*

*இந்த சந்திப்பின் போது, சத்திஷ்கடில் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*ஒடிசாவில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்குப் பின்னர் இறுதி வாக்காளர் பட்டியல் அடுத்த மாதம் 21ஆம் தேதி வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.*

*பெயர் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை வரும் 19ஆம் தேதிவரை சமர்ப்பிக்கலாம் என்று தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள், அடுத்த மாதம் 17ஆம் தேதிவரை அதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*ஹிமாச்சலப்பிரதேசத்தில் இரண்டு ரசாயன பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.*

*234 கோடி ரூபாய் செலவில் இந்த ரசாயன பூங்காக்களை ஏற்படுத்துவதற்கான திட்ட முன்வடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஹிமாச்சலப்பிரதேச அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*Solan மாவட்டத்திற்கு உட்பட்ட Majhali-ல் 150 ஏக்கர் பரப்பில் ரசாயன பூங்காவை ஏற்படுத்துவதற்கான திட்டம் இதில் அடங்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*ஜம்முவில் உள்ள ஆயிரம் பள்ளி வளாகங்களில் மழை நீர் சேகரிப்பிற்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக ஜம்மு கஷ்மீர் அரசு கூறியுள்ளது.*

*மத்திய அரசின் மழைநீரை சேமிப்போம் இயக்கத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜம்மு கஷ்மீர் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*>>>>>>><<<<<<<*

*ஈரான் மீது தாக்குதல் நடத்தினால், உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று அந்நாட்டு அரசு எச்சரித்துள்ளது.*

*மேற்காசியாவில் உள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கட்டமைப்புகளை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படும் என்றும் ஈரான் கூறியுள்ளது.*

*ஈரான் மீது புதிதாக தாக்குதல் நடத்துவதற்கான நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டு வருவதாக வெளியான செய்தியை அடுத்து, ஈரான் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*ஜப்பானில் இன்று நிலநடுக்கம் நேரிட்டது.*

*ஜப்பானின் Aomori பகுதியில் நேரிட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 5 புள்ளி எட்டாக பதிவானது.*

*>>>>>>><<<<<<<*

*17 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*அஜர்பைஜானின் Baku-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 46 கிலோ எடைப்பிரிவில் Sandhya Vishnoi-யும், 53 கிலோ எடைப்பிரிவில் Akshara-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.*

*61 கிலோ எடைப்பிரிவில் Avanshika-வும், 69 கிலோ எடைப்பிரிவில் Taniya-வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.*

*>>>>>>><<<<<<<*

*தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-17, 21-11 என்ற செட்கணக்கில் சீன தைபே-யின் Huang Yu Hsun-ஐ வென்றார்.*

*>>>>>>><<<<<<<*